ஊடகச் செய்தி எண்.12/2017 நாள்.11-04-2017

பெறுநர்
அனைத்து ஊடகங்கள்
சென்னை

அன்புடையீர், வணக்கம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் மற்றும் பொதுச் செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் வெளியிடும் ஊடகச் செய்தி :-

**ஊதிய மாற்றமும் இல்லை!**
**ஊதிய மாற்ற நிலுவையும் இல்லை!!**
**இடைக்கால நிவாரணமும் இதுவரை வழங்கப்படவில்லை!!!**
**அகவிலைப்படி உயர்வேனும் 01.01.2017 முதல் அளிக்க**
**உடனே உத்தரவிட வேண்டும் முதல்வர்!**
**தமிழக அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்தல்!**

மத்திய அரசு, அதன் ஊழியர்களுக்கு 7வது ஊதியக்குழுவின் பரிந்துரைகளை 1.1.2016 முதல் அமல் படுத்தி, மத்திய அரசு ஊழியர்கள் 1.1.2016 முதல் ஊதிய மாற்றத்தையும் அதற்கான நிலுவைத் தொகைகளையும் பெற்று விட்டனர். மேலும் அவர்களுக்கு 01.01.2017ம் தேதி முதல் புதிய ஊதிய மாற்றத்திற்கான அகவிலைப்படி உயர்வு 2 சதவீதத்தையும் மத்திய அரசு கொடுத்துவிட்டது. இதுவன்றி, மத்திய அரசின் 7வது ஊதிய மாற்றத்திற்கான ஊதிய விகிதத்களை பெறாமல் பழைய ஊதிய விகிதத்திலேயே ஊதியம் பெற்றுக் கொண்டிருக்கும் மத்திய அரசின் கீழ் இயக்கும் தன்னாட்சி நிறுவனத்களில் பணி புரியும் ஊழியர்களுக்கு பழைய ஊதிய விகிதத்தில் 4 சதவீத அகவிலைப்படியை 01.01.2017ம் தேதி முதல் உயர்த்தி மத்திய அரசு 7.4.2017ம் தேதி உத்தரவிட்டுள்ளது.

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601


01.01.2016 முதல் தமிழக அரசு ஊழியர்கள், தாத்கள் பெற வேண்டிய ஊதிய மாற்றத்தையோ, அதற்கான நிலுவைத் தொகையையோ கடந்த 16 மாதத்களாக பெறாமல் கடுமையான நிதிச்சுமைக்கு ஆளாகியுள்ளனர். தமிழக அரசால் பிப்ரவரி மாதம் அமைக்கப்பட்டுள்ள அலுவலர் குழு இன்னும் அதன் பரிந்துரைகளை அரசுக்கு சமர்ப்பிக்கவிலை. அதன் காலவரை ஜுன் 2017 வரை உள்ள நிலையில் ஊதிய மாற்றமோ, ஊதிய மாற்ற நிலுவையோ அதுகாலம் வரை தமிழக அரசு ஊழியர்கள் எதிர்பார்கக முடியாத யதார்த்த நிலை உள்ளது. இந்த யதார்த்த நிலையை தமிழக முதல்வர் உணர்ந்து, ஊதிய மாற்றம் அமல் படுத்தப்படும் வரையில், தமிழக அரசு ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணமாக 20 சதவீத ஊதியம் வழத்கிட வேண்டுமென்று அரசு ஊழியர் சத்கம் வேண்டுகோள் வைத்தது. அதையும் தமிழக அரசு கண்டு கொள்ளாமல் உள்ளது. இதன்காரணமாக தமிழக அரசு ஊழியர்கள் கடுமையான நிதித் தேவைக்கு ஆளாகியுள்ளனர்.‘‘2 தமிழக அரசு ஊழியர்களின் இந்த கடினமான நிலையை கருத்தில் கொண்டு, மத்திய அரசு பழைய ஊதிய விகிதத்தில் ஊதியம் பெறும் தன் ஊழியர்களுக்கு 01.01.2017ஆம் தேதி முதல் அகவிலைப்படி உயர்வு அளித்துள்ளது போல், தமிழக முதல்வரும் தமிழக அரசு ஊழியர்களுக்கு 01.01.2017 முதல் பழைய ஊதிய விகிதத்தின் அடிப்படையில் அகவிலைப்படியை உயர்த்தி, உடனடியாக அறிவித்திட வேண்டுமென்று தமிழ்நாடு அரசு ஊழியர் சத்கம் வலியுறுத்தி கேட்டுக்கொள்வதோடு, ஜனவரி 2017 முதல் மார்ச் 2017 வரையிலான மூன்று மாதகால அகவலைப்படி உயர்வு நிலுவைத் தொகையை தமிழக அரசு ஊழியர்கள் ரொக்கமாகப் பெற்றுக் கொள்ளவும் உத்தரவிட வேண்டுமென்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

(மு. அன்பரசு)

பொதுச்செயலாளர்